


**13. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. மாநிலங்களவைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 4 உறுப்பினர்களுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. இந்தியாவின் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் சிங்கப்பூர் வெளியுறவுதுறை அமைச்சரிடம் இன்று எடுத்துரைத்தார்.

3. திருவள்ளூரில் சரக்கு ரயில் விபத்தை அடுத்து தண்டவாள சீரமைப்பு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுகின்றன.

4. திருச்சி பஞ்சப்பூர் பேருந்து முனையம் வரும் 16-ம் தேதிமுதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

5. மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்துள்ளதால் 16 கண் மதகு வழியாக திறக்கப்பட்ட உபரி நீர் நிறுத்தப்பட்டுள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

********

**குடியரசு தலைவர்**

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு மாநிலங்களவைக்கு 4 உறுப்பினர்களை நியமித்து உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் வெளியுறவுத்துறை செயலர் திரு. ஹர்ஷ் வர்த்தன் ஸ்ரிங்லா,

வழக்கறிஞர் உஜ்வல் நிக்காம்,

சமூக ஆர்வலர் திரு. சதானந்தன் மாஸ்டர்,

வரலாற்றுதுறை நிபுணர் டாக்டர் மீனாட்சி ஜெயின் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

********

**ஜெய்சங்கர்**

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இந்தியாவில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து சிங்கப்பூர் வெளியுறவுதுறை அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணனை சந்தித்து பேசினார்.

மூன்று நாள் அரசு முறை பயணத்தின் முதற்கட்டமாக இன்றுகாலை சிங்கப்பூர் சென்ற அவர், தமது சமூக வலைதள பதிவில் கிழக்கு நோக்கிய இந்தியாவின் கொள்கையில் சிங்கப்பூர் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் கட்டமாக சீனா செல்லும் அவர் தியான்ஜினில் வரும் செவ்வாய்கிழமை நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்திலும் பங்கேற்கிறார்.

********

**மன்சூக் மாண்டவியா**

சுற்றுசூழல் பாதுகாப்பு, உடற்பயிற்சி மற்றும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க சைக்கிள் பயணம் உதவிகரமாக இருப்பதாக மத்திய இளைஞர் நலன் விளையாட்டு துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

குஜராத் காந்தி நகரில் ஃபிட் இண்டியா சைக்கிள் பேரணியை தொடங்கிவைத்த அவர் பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தொலைநோக்கு பார்வையான திறன்மிகு இந்தியா இயக்கத்தின் கீழ் ஞாயிறு தோறும் சைக்கிள் பேரணி நடைபெறுவதை சுட்டிக்காட்டினார்.

********

**சுபான்ஷு சுக்லா**

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து சுபான்ஷு சுக்லா உட்பட நான்குபேர் பூமிக்கு திரும்பும் பயணத்தை நாளை தொடங்குகின்றனர்.

இதுகுறித்து சமூகவலைதள பதிவில் குறிப்பிட்டுள்ள மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் இந்திய நேரப்படி நாளைமாலை நான்கரை மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து பூமிக்கான பயணத்தை தொடங்கும் விண்வெளி வீரர்கள் செவ்வாய் பிற்பகல் 3 மணிக்கு புவியை வந்தடைவார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

Axiom 4 Space X Dragon விண்கலம் மூலம் குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லா உட்பட 4 விண்வெளி வீரர்கள் ஃப்ளோரிடா கென்னடி விண்வெளி தளத்தில் இருந்து சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு கடந்த ஜூன் 26ஆம் தேதி சென்றடைந்தனர்.

இந்த பயணத்தில் குரூப் கேப்டன் சுக்லா 7 ஆய்வுகளை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

********

**சரக்கு ரயில்**

சென்னையிலிருந்து பெட்ரோலிய பொருட்களை ஏற்றிச்சென்ற சரக்கு ரயில் இன்றுஅதிகாலை திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே தடம்புரண்டு தீ விபத்திற்குள்ளானதில் நான்கு பெட்டிகள் சேதமடைந்தன.

தீயணைப்பு படையினர் 6 மணிநேரத்திற்கும் மேலாக போராடி தீயை முழுமையாக கட்டுக்குள் கொண்டுவந்ததை அடுத்து தண்டவாள சீரமைப்பு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சரக்கு ரயில் தீவிபத்து காரணமாக அவ்வழியாக செல்லும் சென்னை சென்ட்ரல் - கோவை சதாப்தி விரைவு ரயில், உட்பட 8 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும்,

6 ரயில்கள் மாற்றுபாதையில் இயக்கப்படுவதாகவும் தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

பெங்களூரு, கேரளா, கோவை, உள்ளிட்ட பல்வேறு வழிதடத்தில் இயக்கப்படும் ரயில்கள் காட்பாடி ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டு, பயணிகள் பேருந்துகள் மூலம் கட்டணமின்றி அழைத்து செல்லப்படுகின்றனர்.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் அவசர உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளதோடு உதவி எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

சம்பவ இடத்தை மாநில அமைச்சர் திரு.நாசர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**வாய்ஸ்**

தீ விபத்து ஏற்பட்டுள்ள பகுதிக்கு பொதுமக்கள் செல்ல வேண்டாம் என்றும், இதுகுறித்து அச்சம் கொள்ள தேவையில்லை என்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரதாப் கேட்டுக்கொண்டுள்ளார்.

********

**உதயநிதி ஸ்டாலின்**

தமிழக அரசு மகளிர் முன்னேற்றத்திற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் இருந்து சென்னை கோவைக்கு குளிர்சாதன பேருந்து சேவைகளையும், மகளிருக்கான நகர பேருந்துகளையும் இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் பள்ளி கல்லூரி மாணாக்கரின் கற்றல் திறனை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

********

**கே.என்.நேரு**

திருச்சி பஞ்சப்பூர் பேருந்து முனையம் வரும் 16-ம் தேதிமுதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் அனைத்து அடிப்படை வசதிகளும் இம்முனையத்தில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும், பேருந்து முனையம் செயல்பாட்டிற்கு வந்த சில நாட்களிலேயே அனைத்து வணிக நிறுவனங்களும் செயல்படும் என குறிப்பிட்டார்.

தனியார் பேருந்துகள் விருப்பபட்டால் பஞ்சப்பூர் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கலாம் என்று தெரிவித்த அவர் சத்திரம் பேருந்து நிலையம் மத்திய பேருந்து நிலையம் வழக்கம் போல் செயல்படும் என்றார்.

**வாய்ஸ்**

********

**சேகர்பாபு**

தமிழகத்தில் இதுவரை மூவாயிரத்து 325 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆசியாவிலேயே மிக உயரமான 186 அடி உயர முருகன் சிலை திண்டல் முருகன் கோவிலில் அமைக்கப்பட உள்ளதாக கூறினார்.

முன்னதாக திண்டல் சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் இருந்து மலைகோவிலுக்கு படிகட்டுகள் அமைக்கும் பணியை அமைச்சர் பார்வையிட்டார்.

********

**கலந்தாய்வு**

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்பு பொதுப்பிரிவு மாணாக்கருக்கான கலந்தாய்வு நாளை தொடங்கி அடுத்த மாதம் 19-ம் தேதிவரை நடைபெறுகிறது.

சென்னை அண்ணா பல்கலைகழகத்தின் கீழ் செயல்படும் 445 அரசு, தனியார் பொறியியல் கல்லூரிகளில் BE., B.Tech படிப்புகளுக்கு கடந்த 7ஆம் தேதி தொடங்கி அரசு பள்ளி மாணாக்கருக்கான ஏழரை சதவிகித உள் ஒதுக்கீடு,

மாற்றுத்திறனாளி, விளையாட்டு பிரிவினர், ராணுவ வீரர்களின் வாரிசுகள் உள்ளிட்ட சிறப்பு பிரிவு மாணாக்கருக்கான கலந்தாய்வு கடந்த 11ஆம் தேதியுடன் நிறைவடைந்த நிலையில் நாளை பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வு தொடங்குகிறது.

இதனிடையே கால்நடை மருத்துவம், கால்நடை பராமரிப்பு, உள்ளிட்ட இளநிலை கால்நடை மருத்துவ தரவரிசை பட்டியல் நாளை வெளியிடப்படுகிறது.

********

**சிவகங்கை**

சிவகங்கை மாவட்டம் எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியம் வாராப்பூரில் வரும் 15ஆம் தேதி நடைபெற உள்ள அரசின் திட்டங்கள் குறித்த சிறப்பு முகாம்களை மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கிவைக்க உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

********

**மீனவர்கள்**

காங்கேசன் துறை கடற்பகுதியில் எல்லை தாண்டி மின்பிடித்ததாக கூறி ராமேஸ்வரம் மீனவர்கள் 7 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து அவர்களது ஒரு விசை படகையும், பறிமுதல் செய்துள்ளனர்.

இம்மீனவர்கள் விசாரணைக்காக காங்கேசன் துறை கடற்படை முகாமிற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

********

**இருவரி**

**பெரம்பலூர் மாவட்ட வேலை வாய்ப்பு மையம்** சார்பில் கல்லூரி மாணாக்கருக்கான வழிகாட்டு நிகழ்ச்சி வேப்பந்தட்டை அரசு கலை அறிவியல் கல்லூரியில் நாளை நடைபெறுகிறது.

இதில் தொழிற்பயிற்சி மாணாக்கருக்கான திறன் பயிற்சிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில்** மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த தேசிய அடையாள அட்டை, உதவி உபகரணங்கள், ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் உள்ளிட்ட பணிகள் 120 கள பணியாளர்கள் மூலம் மதிப்பீடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

எனவே பொதுமக்கள் தங்கள் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

********

**மேட்டூர்**

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்துள்ளதால் கடந்த 29ஆம் தேதிமுதல் 16 கண் மதகு வழியாக திறக்கப்பட்ட உபரி நீர் நிறுத்தப்பட்டுள்ளது.

அணைக்கு வினாடிக்கு 22 ஆயிரத்து 500 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

அணை மற்றும் சுரங்க மின் நிலையம் வழியாக வினாடிக்கு 22 ஆயிரம் கன அடி தண்ணீரும்,

கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு 500 கன அடி தண்ணீரும் திறந்துவிடப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் 120 அடியாகும்.

இதனிடையே ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 20 ஆயிரம் கன அடியாக குறைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

********

**கோவில்**

மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் நாளை கும்பாபிஷேகம் நடைபெறுவதை ஒட்டி விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

********

**பழனி**

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் பக்தர்கள் செல்லும் ரோப்கார் சேவை வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்காக வரும் 15ஆம் தேதிமுதல் 31 நாட்களுக்கு நிறுத்தப்படுவதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

எனவே பக்தர்கள் படிபாதை, யானை பாதை, மின் இழுவை பாதையை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

********

**கிரிக்கெட்**

லண்டன் லார்ட்ஸில் இந்தியாவிற்கு எதிரான 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர இறுதியில் இங்கிலாந்து தனது இரண்டாவது இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 2 ரன் எடுத்திருந்தது.

இரு அணிகளும் முதல் இன்னிங்ஸில் 387 ரன் எடுத்துள்ளன.

4-ஆம் நாள் ஆட்டம் இன்றுபிற்பகல் மூன்றரை மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

********

**கால்பந்து**

அமெரிக்காவில் நடைபெறும் FIFA Club உலக கோப்பை கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் இன்று நள்ளிரவு ஷெல்சியா - பாரீஸ் செய்ன்ட் ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

********

**டென்னிஸ்**

விம்பிள்டன் கிரான்ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இன்று இத்தாலியின் சின்னர் - ஸ்பெய்னின் கார்லஸ் அல்கராஸை எதிர்கொள்கிறார்.

********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

********